சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் கற்றல் செயற்பாடு

கே/தெஹி/புனிதமரியாள் த.ம.வி

தரம் :- 10

திருமதி. ச. இரஜினிகாந்தி.

பெயர்- ...............................

1) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. நிலையான அபிவிருத்தியின் அடிப்படை கொள்கையை வெளியிட்டவர் யார்?

அ. சேச்ஸ் என்பவர். ஆ. E. H. கார் என்பவர்.

இ. ஹிட்லர். ஈ. மொன்டைஸ் கீவு.

2. புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்காக அமையாதது எது?

அ. வறுமையையும், பட்டினியையும் இல்லாதொழித்தல்.

ஆ. சிசு மரண வீதத்தை குறைவடையச் செய்தல்.

இ. சுற்றாடலை நிலையாகப் பேணுதல்.

ஈ. உளச் சுகாதாரத்தை குறைவடையச் செய்தல்.

3. தனியார் உடைமைகள் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஆண்டு யாது?

அ. 1956. ஆ. 1974. இ. 1964. ஆ. 1955.

4. 2012 ம் ஆண்டு இலங்கையின் சமூக அபிவிருத்திக் குறிகாட்டி படி எழுத்தறிவு வீதம் யாது?

அ. 65.2% ஆ. 18.4% இ. 92.2% ஈ. 17.4%

5. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாக கொண்ட நாடு எது?

அ. சிங்கப்பூர் ஆ. ரஷ்யா இ. சீனா ஈ. பாகிஸ்தான்

2) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. அபிவிருத்தி தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் 2 தருக.
2. பேண் தகு அபிவிருத்தி என்றால் என்ன?
3. நிலையான அபிவிருத்தியின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் 4 தருக.
4. அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள இலக்குகள் எத்தனை? அவை எவை?
5. 1977 ம் ஆண்டு அரசு பங்களிப்பு செலுத்திய 3 துறைகளும் எவை?
6. 2004 ம் ஆண்டுக்கு பின்னர் திறந்த பொருளாதார கொள்கைக்கு அமைவாக கல்வித்துறையில் ஏற்படுத்திய புதிய மாற்றங்கள் 3 தருக.
7. அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக இலங்கை பெற்றுவரும் நன்மைகள் 5 தருக.
8. உலகமயமாதல் என்றால் என்ன?
9. நவீன தொழிநுட்ப உபகரணங்கள் 4 தருக.
10. உலகமயமாதலின் சில விசேட பண்புகள் 3 தருக.